Registered as a Newspaper



# உதயன்

சுடர் : 41
கதிர் : 170

வெள்ளிக்கிழமை
15 மே 2026

வைகாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஈழத்தமிழரின் நலனுக்காக இணைந்து செயற்பட வருக!

### முதல்வர் விஜயின் தமிழக அரசுக்கு பிரிட்டன் பாராளுமன்றக் குழு கடிதம்

**கொழும்பு, மே 15**

**ஈழத் தமிழர்களுக்குத் துணைநிற்கவும், அவர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் தமிழக அரசாங்கத்துடன் நெருக்கமாகச் செயற்படத் தயார் என்று பிரிட்டன் பாராளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்து கட்சிக் குழு தெரிவித்துள்ளது.**

>>11

## வடக்கில் நேற்று பரவலாக மழை!

### இன்றும் தொடர வாய்ப்பு



யாழ்ப்பாணம், மே 15
வடமாகாணத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை இன்றும் தொடரும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

>>11

யாழ். பேருந்து நிலைய வளாக

## மலசலகூடத் தொகுதி தொடர்பில் சட்ட ஆலோசனைக்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மலசலகூடத் தொகுதியை நிர்வகிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை தீர்மானித்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வு நேற்று நடைபெற்றது. மலசலகூடத் தொகுதி தொடர்பில்

>>11

## தவறுசெய்த தேரர்களை துறவறத்திலிருந்து நீக்குக

### சோபித தேரர் வலியுறுத்து

கொழும்பு, மே 15
தவறு செய்த தேரர்கள் அனைவரும், அவர்களின் தகுதியைப் பொருட்படுத்தாமல் துறவற உடையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

>>11

சுழிபுரத்தில் சோகம்

## மின்னல் தாக்கி இளைஞன் பலி



யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த அண்ணாத்துரை வின்சன் (வயது - 22) என்ற இளைஞரே இவ்

>>11

## தமிழினப் படுகொலைக்கு மாநகரசபையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 15
முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரு

>>11

திருவள்ளுவர் பண்பாட்டு மையம்

## அமைச்சரவை முடிவை எதிர்த்து யாழ். மாநகரசபையில் தீர்மானம்

### ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பவும் முடிவு

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம்திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியமொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியமையை கண்டித்த யாழ்ப்பாணம் மாநகரசபை, குறித்த முடிவை அரசாங்கம் மீளப்பெற வேண்டும் என ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் தீர்மானித்துள்ளது.
யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா

>>11



## கிளிநொச்சி - கோணாவிலில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி!

கிளிநொச்சி, மே 15
கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நேற்று முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

>>11

## வவுனியாவை அடைந்தது முள்ளிவாய்க்கால் ஊர்தி



வவுனியா, மே 15
தமிழினப் படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் இடம்பெற்றுவரும் ஊர்திப்பவனி நேற்று வவுனியாவைச் சென்றடைந்தது. தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்த ஊர்திப் பவனி தமிழர் தாயகத்தின் அனைத்து

>>11



முச்சந்தி மாறன்

"எங்கட பிரச்சினையத் தீர்க்க அடுத்தவையை நம்பிக்கொண்டிருக்கிறது நல்லதில்லை கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4431 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 48 57 71 75 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1498 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 06 23 36 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0457 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 4 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2537 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 13 22 38 77 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6189 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 7 4 9 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2219 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 24 57 66 70 |
| விசேட எழுத்து | V |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0305 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 30 42 64 |

# பலப்படுத்தப்படுகின்றது அரச நிதிப் பரிமாற்றம்!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

**திறைசேரி ஊடாகச் செலுத்தப்பட்ட நிதியில் இடம்பெற்ற இந்த மோசடி மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிசெய்ய நிதியமைச்சுடன் இணைந்து புதிய பாதுகாப்புச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நடைமுறையிலுள்ள நிதிப் பரிமாற்றச் செயன்முறைகளை நிதியமைச்சும் மத்திய வங்கியும் இணைந்து மீளாய்வு செய்து வருகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறான இணையவழி மோசடிகள் இடம்பெறுவதைத் தவிர்க்கத் தொழில்நுட்ப ரீதியான பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கடன்வழங்குநர் தரப்புக்கு திறைசேரியின் ஊடாகச் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் நிதி மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் கணக்கு உரிமையாளர் (அரசாங்கம்) வழங்கும் அறிவுறுத்தல்களைச் சரிபார்த்துப் பணத்தைப் பரிமாற்றுவதே மத்திய வங்கியின் பணி. கணக்கு விவரங்கள் கணினி முறைமையால் அங்கீகரிக்கப் பட்டதும் கொடுப்பனவு முன்னெடுக்கப்படும். வாடிக்கையாளர் வழங்கிய அறிவுறுத்தல்களை மாற்றுவதற்கோ அல்லது அதில் தலையிடுவதற்கோ வங்கிக்கு அதிகாரம் இல்லை- என்றார் . (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 14.05.2026 | வியாழக்கிழமை | 0897 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 5 0 3 6 6 2 | |

| Super Ball | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3163 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 25 52 55 68 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 01 24 66 70 |
| வெற்றி வாரம் | 5324 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0993 |
| வெற்றி இலக்கம் | 06 36 49 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 48 55 57 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4875 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 16 19 35 64 |
| வெற்றி வாரம் | 2339 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 14.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 01 09 52 69 |
| வெற்றி வாரம் | 2989 |



## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

காலி,மே 15

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரகினா கந்த பகுதியில் மின்சாரம் தாக்கியதில் வயோதிபப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 74 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மரமொன்று முறிந்து விழுந்ததில் அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் சிக்கி, மின்சாரம் தாக்கியதிலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## வெசாக் அலங்காரங்களில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தடை

கொழும்பு, மே 15

எதிர்வரும் வெசாக் கால அலங்காரங்கள் மற்றும் தான நிகழ்வுகளின் போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களைப் பயன்படுத்தவேண்டாம் என பொதுமக்களிடம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கால் தயாரிக்கப்படும் சில பொருள்களின் விற்பனையும் பயன்பாடும் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## பிரியதர்ஷன யாப்பா வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மே 15

முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 61 இலட்சம் ரூபாவுக்கும் அதிக நிதியை மோசடி செய்த குற்றத்தின் கீழ் இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2014 -2015 வரையான காலப்பகுதியில் வெள்ள நிவாரணம் வழங்குவதாகக் கூறி 6,146,110 ரூபா நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாக இவர்கள்மீது சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## 'டுபாய் அசித'வின் சொத்துகள் முடக்கம்

கொழும்பு, மே 15

பெருமளவான போதைப்பொருள் கடத்தல்காரராகக் கருதப்படும் 'டுபாய் அசித' என்பவருக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் 105 பவுண் தங்கத்தை முடக்குவதற்கு பாணந்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் முன்வைத்த காரணிகளைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவருக்குச் சொந்தமான சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான ஹைஏஸ் ஒன்றையும், 10 இலட்சம் ரூபா பணத்தையும் முடக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-



## வருமான வரி ஊழியர் ஊழல் குற்றத்தில் கைது

பொலநறுவை, மே 15

காணி ஒன்றின் மதிப்பீட்டு அறிக்கையை குறைந்த பெறுமதியில் தயாரித்துக் கொடுப்பதற்காக 35,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றத்தில் பொலநறுவை மாகாண வருமான வரி, மாவட்ட அலுவலகத்தின் சுகாதாரத் தொழிலாளி ஒருவர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலநறுவை பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இலஞ்சப் பணத்தைப் பெற்றுக்கொண்ட போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பொலநறுவை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஷானி அபேசேகரவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி

## மேன்முறையீட்டு தீர்ப்பாயம் உத்தரவு

**கொழும்பு, மே 15**

**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவுக்கு, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி உயர்வு வழங்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

இந்தப் பதவி உயர்வானது 2026 ஓகஸ்ட் 25ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்படவேண்டும். அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலம் முதல் இது வரையான காலப்பகுதிக்கான அனைத்து நிலுவை ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளையும் முழுமையாகச் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்படும் ஷானி அபேசேகர, பல சிக்கலான குற்றப் புலனாய்வுகளை வழிநடத்திய திறமையான அதிகாரியாக அறியப்படுகிறார். கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைது செய்யப்பட்ட ஷானி அபேசேகர, சுமார் 11 மாதங்களுக்கு அதிககாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். 2024ஆம் ஆண்டு 3/2018 சுற்றுநிருப விதிகளின்படி மீண்டும் சேவையில் இணைந்துகொண்ட ஷானி அபேசேகர, அதன் பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## டிஜிற்றல் மயமாகின்றன உள்ளூராட்சி சபைகள்

கொழும்பு, மே 15

உள்ளூராட்சி சபைகளில் பொதுப்பயன்பாட்டுக் கொடுப்பனவு சேவைகளை டிஜிற்றல் மயப்படுத்தும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த டிஜிற்றல் மாற்றம் 'GOV PAY' எனும் விசேட கட்டண முறைமையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் தங்களின் உள்ளூராட்சிமன்றக் கொடுப்பனவுகளை இணையவழியில் இலகுவாகச் செலுத்தமுடியும்.

முதற்கட்டமாக 130 நிறுவனங்களில் இந்தச் சேவை முழுமையாகச் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஏனைய அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இந்த 'GOV PAY' முறைமையை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரச சேவைகளை நவீனமயப்படுத்தி, பொதுமக்களுக்கான சேவைகளை விரைவுபடுத்தும் நோக்கில் இந்த டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## ஆஸ்துமா நோயாலேயே 6 வீதமான மரணங்கள்!

கொழும்பு, மே 15

இலங்கையில் பதிவாகும் மொத்த மரணங்களில் சுமார் 6 சதவீதம் ஆஸ்துமா நோயினால் ஏற்படுகின்றது. முறையான விழிப்புணர்வு மற்றும் சரியான சிகிச்சை மூலம் இந்த உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும் என சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். உலக ஆஸ்துமா தினத்தை முன்னிட்டு, சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுவாச நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் சுமன ஹந்தகல மேலும் தெரிவித்துள்ளதாவது-

உலகம் முழுவதும் சுமார் 260 மில்லியன் மக்கள் ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் நாளொன்றுக்குச் சுமார் 1000 பேர் இந்த நோயினால் உயிரிழக்கின்றனர். இந்த நோயின் தாக்கம் குறிப்பாகச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. ஆஸ்துமா என்பது ஒருவரிடமிருந்து ஒருவருக்குப் பரவும் தொற்றுநோய் அல்ல; இது ஒரு நாட்பட்ட சுவாசக்குழாய் தொடர்பான நோயாகும். சரியான மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பின்பற்றுவதன் மூலம் ஆஸ்துமா நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, உயிரிழப்புகளைத் தடுக்கமுடியும் -என்றார். (ச-இ)

## யானை தாக்கி பெண் சாவு!



கொழும்பு, மே 15

கிரிஉல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரிசெதகம பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 44 வயதுடைய பெண் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம்தொடர்பில் கிரில்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## யோஷிதவின் வழக்குக்கு தடைவிதிக்க மன்று மறுப்பு

கொழும்பு, மே 15

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் யோஷித ராஜபக்சவுக்கு எதிராக, பணமோசடி தடுப்புச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கைப் பராம[illegible] யாது எனத் தெரிவித்து யோஷித ராஜபக்ச தரப்பு சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் உதேஷ் ரணதுங்க நிராகரித்தார். பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து விசாரணை செய்வதற்கு எவ்வித சட்டத்தடையும் இல்லை என அவர் அறிவித்துள்ளார். (ச-இ)




## அடாது மழை பெய்தாலும்...!

அடாது மழை பெய்தாலும் விடாமல் வேலை செய்து மேலதிகாரிமாரிட்ட நல்லபேர் எடுக்கிறதில எங்கட அதிகாரிமார் கெட்டிக்காரர். ஆனால் அதுக்காக அவையள் சின்னஞ்சிறுசுகளை வதைக்கிறது பிழையெல்லோ. அப்பிடி ஒரு சம்பவம் ரண்டொரு நாளுக்கு முன்னால தென்மராட்சியில நடந்திருக்கு. அங்க வலயமட்ட அஞ்சாம் வகுப்புக்குட்பட்ட பிள்ளையளின்ர செயற்பட்டு மகிழ்வோம் எண்ட விளையாட்டுப்போட்டியள் நடந்தது. அந்த வலயத்தில இருக்கிற பள்ளிக்கூடப் பிள்ளையள் எல்லாம் இந்தப் போட்டியில வெல்லவேணும் எண்ட விருப்பத்தோட விளையாடிக் கொண்டிருந்தவை. வானம் மப்பும் மந்தாரமுமா இருந்தபடியால களைப்புத் தெரியாமல் அந்தப் பிள்ளையள் விளையாடிக்கொண்டிருக்கேக்க பெருமழை பெய்யத் தொடங்கிட்டுது. மைதானத்துக்க நிண்ட பிள்ளையள், நடுவர்மார், ரீச்சர்மார், அதிகாரிமார் எல்லாரும் மழையில நனையாமல் கட்டடங்களுக்குள்ள ஓடிவந்து இருந்திட்டினம்.,

கொஞ்சநேரம் பொழிஞ்சு தள்ளின மழையின்ர வேகம் குறைஞ்சு, தூறலா மாறினாலும் முழுசா நிண்டபாடில்லை. அதிகாரிமார் அடிக்கடி வானத்தை அண்ணாந்து பாக்கிறதும், பிறகு மணிக்கூட்டைப் பார்த்து உதட்டைப் பிதுக்கிறதுமா இருந்திச்சினம். ஆனால் இவையின்ர ரென்சனைக் கண்டபிறகும் தூறல் நிக்கிற பிளான் இல்லை. அது தன்ர பாட்டில தூறிக்கொண்டே இருந்திச்சு. கொஞ்சநேரத்தில திடீரெண்டு போட்டியில அடுத்ததா பங்குபற்றுற பள்ளிக்கூடப் பிள்ளையளை கிரவுண்டுக்க இறங்கச் சொல்லி ஒரு அறிவிப்பு. அந்தப் பள்ளிக்கூடத்துக்காரருக்கு ஒண்டுமே விளங்கேலை. மழை கடுமையாத் தூறிகொண்டிருக்கேக்க என்னெண்டு பிள்ளையள் அதில நனைஞ்சபடி விளையாட ஏலும்? மழையை விடவும் தூத்தல் தான் வருத்தத்தைக் கொண்டு வரும். அதோட வழக்கமா செய்யிற வீரியத்தோட பிள்ளையள் மழைக்க நனைஞ்சபடி செயற்பட்டு மகிழவும் முடியாது. ஆனால் அதையெல்லாம் அதிகாரிமார் ஒரு பொருட்டாவே நினைக்கேலை, அவையள் தாங்கள் நனையமால் கட்டடத்துக்க இருந்து கொண்டு பிள்ளையளை தூறலுக்கு நடுவில நிண்டு செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்ச்சியைச் செய்யச் சொல்லிப் போட்டினம்.

அதிகாரிமார் சொன்னால் அதை எதிர்த்துக் கதைக்கேலாது தானே. மேல மழை தூற, கீழ கிரவுண்டுக்க நிண்ட தப்பல் தண்ணிக்குள்ள அந்தப் பச்சிளம் பிள்ளையள் விளையாட்டுகளைச் செய்து முடிச்சவை. தாங்கள் திட்டமிட்டபடி நிகழ்வை நடத்தி முடிச்சுப்போட்டம் எண்ட திருப்தியோட அதிகாரிமார் பறந்திட்டினம். ஆனால் அந்த மழைக்குள்ள நனைஞ்சபடி நிண்ட பிள்ளையளுக்கு வருத்தம் துன்பம் வந்தால் அதுக்கு ஆர் பொறுப்பு? 'மழை திடீரெண்டு வந்தால் நாங்கள் என்ன செய்யிறது?' எண்டு அதிகாரிமார் மழுப்பேலாது. இப்ப ரெக்னோலொஜியும் வளர்ந்து, எப்ப மழை பெய்யும், எப்ப வெயில் அடிக்கும் எண்டு முதலே கணிச்சு சொல்லுற ஆக்களும் கூடிப்போய்க்கிடக்கிற காலம் இது. அதால மழை பெய்யும் எண்டது தெரிஞ்சும் ஏன் அண்டைக்குத்தான் நிகழ்வை வைக்கோணும் எண்டு அதிகாரிமார் ஒற்றைக்காலில நிக்கினம் எண்டுதான் தெரியாமல் கிடக்கு. அதே வலயத்தில நேற்றும் மழை பெய்யப் பெய்ய ஆங்கில தின நாடகப் போட்டியும் நடந்திருக்கு. அது உள்ளுக்க மேடையில எண்டதால மழையில பிள்ளையள் நனையாது எண்டு அதிகாரிமார் அதுக்குமொரு சாட்டுச் சொல்லுவினம். மேடையிலயும் மண்டபத்துக்கையும் தானே மழை பெய்யாது. ஆனால் அந்த வலயத்தில இருக்கிற பிள்ளையள் இந்த மழைக்குள்ள நனைஞ்சு வந்துதானே நாடகம் நடிக்கவேணும். நிகழ்ச்சியளை நடத்தி முடிச்சாக் காணும் எண்டு நடத்தாமல் கொஞ்சம் காலநிலையையும், பிள்ளையளின்ர நிலையையும் பார்த்துச் செய்தால் என்ன?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருக்கேதீஸ்வர பெருந்திருவிழாவுக்கு கொடிச்சீலை காளாஞ்சி கையளிப்பு



யாழ்ப்பாணம்,மே 15

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலையை வழங்கும் பரம்பரை உபயகாரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கொடிச்சீலை உபயகாரர்களுக்கான அழைப்பிதழ் மற்றும் காளாஞ்சி யாழ்ப்பாணம் திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது. தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குப் பாரம்பரியமாக கொடிச்சீலை வழங்கும் உரிமையைக் கொண்டுள்ள செங்குந்த மரபினைச் சேர்ந்த திருநெல்வேலி கென்னடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் இல்லத்துக்கு, ஆலயப் பிரதம குருக்கள் மற்றும் திருப்பணிச் சபை உறுப்பினர்கள் காளாஞ்சியை எடுத்துச் சென்றனர். அங்கு பெருந்திருவிழா பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் 20ஆம் திகதி பாரம்பரிய முறைப்படி யாழில் இருந்து கொடிச்சீலை எடுத்து செல்லப்படவுள்ளது. (ச-26)

# வவுனியாவிலும் நினைவேந்தல்

வவுனியா, மே 15

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில், வவுனியா இலுப்பையடிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதிப்போரின்போது உணவின்றி தவித்த மக்களுக்குக் கஞ்சி எவ்வாறு உயிர்காக்கும் மருந்தாக அமைந்தது என்பதையும், அக்காலப்பகுதியில் மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களையும் நினைவுபடுத்தியும் கஞ்சி வழங்கப்பட்டது. நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (க-110-பி)


## INVITATION FOR BID 2026_02
## OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Assistant Commissioner, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna now invites sealed hids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million"**
4. Qualification requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Schedule** (Section 5) for **SBD 3 Documents**
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **15/05/2026 To 28/05/2026** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Assistant Commissioner, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna (T.P:021-222 2654, Fax:021-222 3410, email:raclgjaffna@gmail.com) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 15/05/2026 To 28/05/2026 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna on or before 10:30:00 AM at stated in table below** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Office of the Regional Assistant Commissioner of Local Government, Sivan Pannai Road, Jaffna commencing at 10:30:00 AM as stated in table below**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit / Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **from 15/05/2026 To 28/05/2026** |
| **Pre-Bid Conference** | **At 10:30:00 AM on 26/05/2026** |
| **Closing and Opening of Bids** | **At 10:30:00 AM on 29/05/2026** |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| CBG/NP/JAF/ACLG/2026/01 | Repair of R/ACLG Office, Jaffna | 2.37 | 84 | C9 or above (Buildings) | 2,000.00 | 24,000.00 | 14/08/2026 | 49 Days |

Chairman
Regional Procurement Committee
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna
15.05.2026

(cr.47539) (N-1)



## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின் பணிப்பாளரான
**திரு.மயில்வாகனம் இராஜநாயகம்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**அமரர்**
**திருமதி சிவபாலன் தவமணி**
அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தக்கின்றோம்.

**M.Rajanayagam & Co.
Chartered Accountants
Staffs.**

(CS 61438)A

இல.140, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



## அகண்டயாகம்

எதிர்வரும் **29.05.2026** வெள்ளிக்கிழமை இரவு **8.30** மணி
தொடக்கம் **31.05.2026** ஞாயிறு காலை **7.00** மணிவரை
**30** மணித்தியாலம் நடைபெறவுள்ள **அகண்ட யாகத்தில்**
**பிரதம அதிதியாக கலந்துகொள்ளும்**
**சிவத்திரு சைவமணி ஐயா**
ஊர்காவற்துறை திருமங்கஞ்சேரியில் நேற்று காலை **7.00**
மணியளவில் யாகசித்தரை சந்தித்து கலந்துரையாடல்
நடாத்தியுள்ளார். இக் கலந்துரையாடலில் யாக **செயலாளர்**
**விஸ்வஸ்ரீ சிவரூபன் தயாளன்** அவர்கள்
யாக மகிமையை விளக்கியுள்ளார்

**மதங்கமா மகரிஷி ஆச்சிரமம்**
**077 074 2990**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை




# வினையாகும் இணைய விளையாட்டு

தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி மனித வாழ்வை எளிதாக்கியுள்ள அதேவேளை, நம் எதிர்காலத் தூண்களான சிறுவர்களை ஒரு இருண்ட அறைக்குள் தள்ளிவருகின்றது என்பதற்கு அண்மைக் காலத் தரவுகள் சாட்சியாக உள்ளன. மிக முக்கியமாக, இணையவழி விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்காகத் தொடங்கி, இன்று ஒரு பாரதூரமான சமூக மற்றும் உளவியல் நெருக்கடியாக உருவெடுத்துள்ளன. இதுதொடர்பாகக் கணினி அவசர தயார்நிலைக் குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக்க தமுனுபொல விடுத்துள்ள எச்சரிக்கை, ஒவ்வொரு பெற்றோரினதும் சமூக ஆர்வலர்களினதும் கண்களைத் திறக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய இணையவழி விளையாட்டுகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட உளவியல் தந்திரத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. 'வெகுமதிகள்' மற்றும் 'பரிசுகள்' என்ற பெயரில் இவை சிறுவர்களின் மனதில் சூதாட்ட மனப்போக்கை விதைக்கின்றன. இது ஒரு கட்டத்தில் போதைப்பொருள் அடிமைத் தனத்துக்கு இணையான ஒரு தீவிர நிலையை அடைகின்றது. வெற்றி பெற வேண்டும் என்ற வெறி, தோற்கும்போது ஏற்படும் ஆத்திரம், மீண்டும் மீண்டும் விளையாடத் தூண்டும் ஆர்வம் என்பன ஒரு சிறுவனை போதைப்பொருள் அடிமைத்தனத்துக்கு இணையான ஒரு தீவிர நிலைக்கு இட்டுச் செல்கின்றன. இதன் விளைவாகவே, இணைய விளையாட்டைத் தடுக்கும் பெற்றோர் மீது சிறுவர்கள் வன்முறையைப் பிரயோகிப்பதும், வீட்டிலுள்ள பொருள்களைச் சேதப்படுத்துவதும், தீவிர மன அழுத்தத்திற்கு உள்ளாவதும் இன்று அன்றாடச் செய்திகளாகிவிட்டன. அதைவிடவும் ஆபத்தான விடயம் யாதெனில், இந்த விளையாட்டுகள் மூலம் அறிமுகமற்ற நபர்களுடன் ஏற்படும் 'டிஜிற்றல் நெருக்கம்' ஆகும். முகம் தெரியாத நபர்களிடம் தமது தனிப்பட்ட பிரச்சினைகள், புகைப்படங்கள் மற்றும் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் சிறுவர்கள் மிக இலகுவாகப் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் இணையவழி மோசடிகளுக்கு இரையாகின்றனர்.

இணையவழி விளையாட்டுகளை முழுமையாகத் தடைசெய்வது இன்றைய டிஜிற்றல் உலகில் சாத்தியமற்ற ஒன்றாக இருக்கலாம். ஆனால், முறையான கண்காணிப்பு மூலம் ஆபத்துகளைக் குறைக்க முடியும். பிள்ளைகள் விளையாடும் விளையாட்டின் தரம் மற்றும் வயதுப் பொருத்தப்பாட்டை பெற்றோர் நிச்சயம் உறுதிசெய்யவேண்டும். பிள்ளைகள் இணையத்தில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்துவதுடன், அவர்களுக்கு மைதான விளையாட்டுகளில் ஆர்வத்தை ஏற்படுத்துவதும் அவசியம். எல்லாவற்றையும் விட பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசுவதன் மூலம், இணைய நண்பர்களை விடப் பெற்றோரே சிறந்த வழிகாட்டிகள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முயலவேண்டும்.

தொழில்நுட்பம் என்பது ஒரு கத்தி போன்றது. அதைப் பிள்ளைகளின் கைகளில் கொடுக்கும் போது, அது அவர்களுக்கு அறிவைத் தரும் கருவியாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களின் வாழ்வையே சிதைக்கும் ஆயுதமாக மாறிவிடக்கூடாது. அரசும், கல்வி நிறுவனங்களும், குறிப்பாகப் பெற்றோரும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



## பொய்யாமொழி

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல்

பொருள்: தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.



# அரச ஊழிய வேதன அதிகரிப்பு விசேட ஆணைக்குழு விரைவில்



கொழும்பு, மே 15

**அரச ஊழியர்களின் வேதனத்தை அதிகரிப்பதற்கும் அவர்களின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்குமான விசேட ஆணைக்குழுவை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

அரச துறையில் பல தசாப்தங்களாக நிலவிவரும் வேதன முரண்பாடுகள் மற்றும் தொழில்முறை சார்ந்த பிரச்சினைகளுக்கு இந்த ஆணைக்குழுவின் ஊடாகத் தீர்வு காண எதிர்பார்க்கப்படுகிறது. அரச ஊழியர்களின் வேதன முரண்பாடுகளைக் களைந்து, அவர்களின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்காக விசேட ஆணைக்குழுவொன்று நிறுவப்படும் என்ற அறிவிப்பு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முன்வைக்கப்பட்டிருந்தது. அரச ஊழியர்களின் நீண்ட காலக் கோரிக்கைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்தச் செயல்முறை தற்போது உத்தியோகபூர்வமாகத் தொடங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இரத்தினக் கற்கள் கொள்ளை

இரத்தினபுரி, மே 154

இரத்தினபுரி, ஹில்லன பகுதியில் உள்ள இரத்தினக்கல் வியாபாரி ஒருவரின் வீட்டில் 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்ட நிலையில், சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரத்தினபுரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இந்தச் சந்தேகநபர், இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (எ-இ)

# 919 பேர் கைது

கொழும்பு, மே 15

நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 919 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்றநால்வரும்சட்டவிரோதச்சொத்துகள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 852 கிராம் ஹெரோய்ன், ஒரு கிலோ 366 கிராம் ஐஸ், 5 கிராம் கொக்கெய்ன், ஒரு கிலோ 86 கிராம் கஞ்சா, 258 கஞ்சாச் செடிகள், 70 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 545 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 11,591 போதைமாத்திரைகள், 696 கிராம் மதனமோதகம் மற்றும் 69 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# குடிவரவுத் திணைக்களத்தில் மோசடி; தொழில்நுட்ப உத்தியோகத்தர் கைது

கொழும்பு, மே 15

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டாளர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மென்பொருள் தொகுதி (Software System) ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக 9.8 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை செலவிடப்பட்டதாக சந்தேகநபர் எழுத்துபூர்வமான பிரகடனம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். எனினும், அத்தகைய மென்பொருள் தொகுதி எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொதுச்சொத்துகள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களை இழைத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## நாளை

சனிக்கிழமை- வைகாசி 3
16.05.2026
சுபநேரம் : 02.53 – 04.23
ராகுகாலம் : 08.53 – 10.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 15

குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய (காளி கோவில்) வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள அலங்கார உற்சவத்தில் பத்தாம் நாளான எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், அன்னதானமும், மறுநாள் 30 ஆம் திகதி சனிக்கிழமை வைகாசி விசாகப் பொங்கலும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-41-66)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 15

சித்தன்கேணி காங்கேயன்பதி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 21ஆம் திகதி வியாழக்கிழமை பாற்குடப்பவனியும் இடம்பெறவுள்ளன. (ச)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 15

பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின், யாழ்.மாவட்ட ஜே/18 இன் 17 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். யாழ்.மாவட்ட நிதியத்தின் தலைவர் அ. அருந்தவநேசன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொள்வார். (க)

### அதிக விலைக்கு

## குடிதண்ணீர்ப் போத்தல் ரூ.10 இலட்சம் தண்டம்

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விடக் கூடுதல் விலைக்கு போத்தல் குடிதண்ணீரை விற்பனை செய்த மாத்தறையிலுள்ள இரண்டு சுற்றுலா ஹோட்டல்களுக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் மொத்தம் 10 இலட்சம் ரூபா அபராதம் நேற்று முன்தினம் விதித்துள்ளது.

இந்த ஹோட்டல்களில் ஒரு லீற்றர் குடிநீர்ப் போத்தலின் அரசாங்க விலை 100 ரூபாவாக இருக்கையில், அதனை 450 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதோடு, 500 மில்லிலீற்றர் குடிநீர் போத்தலின் அரசாங்க விலை 70 ரூபாவாக இருக்கையில், அதனை 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டு உறுதிசெய்யப்பட்ட நிலையில் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் கூடுதலாக அறவிடும் வர்த்தகர்களுக்கு எதிராக 1977 என்ற அவசர இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு ஆதாரங்களுடன் முறைப்பாடு அளிக்குமாறும் நுகர்வோர் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

# INVITATION FOR BIDS 2026/04

## Valikamam South Pradeshiya Sabha, Chunnakam

## Council Fund – Stage 04 and PSDG Fund

1. The **Chairman, Divisional Procurement Committee (DPC)**, on behalf of the, **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Schedule**(Section 5) for **SBD 3** Documents and Contract data,
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. **(T.P:021-224-0017, E mail – worksvsps@gmail.com )**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees Rs 3,500.00 only**. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 a.m as stated in table below**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam**
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table below.**

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2026.05.15 - 2026.05.29** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2026.05.22** |
| **Closing and Opening of Bid** | **At 10.30 A.M on 2026.06.01** |

| S. No | Bid ID | Description of Work | Estimate Cost - Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount | Validity Period |
| **Council Fund - Budget** | | | | | | | | |
| 01 | NP/14/41(15)/02/05/CF / 2026/15 | **Package 01**<br>1. Renovation of Erlalai Mayana road (J/206)<br>2. Construction of five star sports club cross road (J/206)<br>3. Construction of Kalikovil cross road (J/206)<br>4. Construction of balance work of Saiva Magayana road (J/206)<br>5. Construction of Uriyaddy vilichity cross road (J/206) | 2.56 | 75 Days | C9 or above (High way) | 19/07/2026 | 26,000.00 | 16/08/2026 |
| 02 | NP/14/41(15)/02/05/CF / 2026/16 | **Package 02**<br>1. Construction of Kupilan junction 1st branch road (J/211)<br>2. Renovation of Kuppilan north Koddarmanai road (J/211)<br>3. Construction of Mallakam Punnalaikkadduvan Branch road (J/211) | 5.67 | 75 Days | C8 or above (High way) | 16/08/2026 | 57,000.00 | 13/09/2026 |
| 03 | NP/14/41(15)/02/05/CF / 2026/17 | **Package 03**<br>1. Construction of Kappanpulavu bhaarathi Community center front left side cross road (J/208)<br>2. Construction of Maththalodai road left side 3rd cross street (J/209)<br>3. Construction of Nachchiyar road right side 2nd cross street (J/208)<br>4. Construction of Valaivu Nachchiyar road left side 2nd cross street (J/209) | 3.55 | 75 Days | C9 or above (High way) | 19/07/2026 | 36,000.00 | 16/08/2026 |
| 04 | NP/14/41(15)/02/05/CF / 2026/18 | **Package 04**<br>1. Renovation of Seemaddi road (J/203)<br>2. Construction of Thiraviyam kadai 2nd cross road (J/203) | 1.32 | 60 Days | C9 or above (High way) | 19/07/2026 | 13,500.00 | 16/08/2026 |
| 05 | NP/14/41(15)/02/05/CF / 2026/19 | **Package 05**<br>1. Construction of Kanthaiya Road 1st by lane (J/197)<br>2. Construction of Variyapulam Vairavar Kovil road (J/197)<br>3. Construction of Paruthiyolai road 1st Cross road (J/195)<br>4. Renovation of Saddatharani Sellaththurai road (J/195) | 3.05 | 75 Days | C9 or above (High way) | 19/07/2026 | 30,500.00 | 16/08/2026 |
| 06 | NP/14/41(15)/02/05/CF / 2026/20 | Construction of Iyanaar Kovil Drainage Channel (J/199) | 1.53 | 60 Days | C9 or above (High way) | 19/07/2026 | 15,500.00 | 16/08/2026 |

Conti...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | NP/14/41(15)/02/05/CF / 2026/21 | **Package 06**<br>1. Construction of Katpokkanai kovil Cross road (J/186)<br>2. Construction of Madaththady road side Retaining wall (J/200)<br>3. Renovation of Srilanka road (J/186) | 4.07 | 75 Days | C8 or above (High way) | 19/07/2026 | 41,000.00 | 16/08/2026 |
| 08 | NP/14/41(15)/02/05/CF / 2026/22 | **Package 07**<br>1. Contruction of Anthiran 1st lane (J/187)<br>2. Contruction of Anthiran Mathakovil lane (J/187)<br>3. Contruction of Sankuveli pillaiyar 1st lane (J/187)<br>4. Contruction of Thulmiyan thodda cross road (J/187) | 6.05 | 75 Days | C8 or above (High way) | 16/08/2026 | 61,000.00 | 13/09/2026 |
| 09 | NP/14/41(15)/02/05/CF / 2026/23 | **Package 08**<br>1. Construction of Uduvil Girl's College west road 1st cross road (J/185)<br>2. Construction of Uduvil Girl's College west road 2nd cross road (J/185)<br>3. Construction of Ramanathan road (KKS road) cross road (J/185)<br>4. Construction of Maruthanarmadam Manipay road 4th cross road (J/185)<br>5. Construction of Ambalavanar road 1st by lane (J/186) | 5.23 | 75 Days | C8 or above (High way) | 16/08/2026 | 52,500.00 | 13/09/2026 |
| 10 | NP/14/41(15)/02/05/CF / 2026/24 | **Package 09**<br>1. Construction of Kathiramalai 1st Cross road 1st by lane (J/196)<br>2. Construction of Villanai 2nd Cross road (J/196)<br>3. Construction of Sivan Kovil back lane (Balance) (J/196)<br>4. Construction of Ramanathan road (KKS) 1st Cross road (J/196)<br>5. Construction of Sivapoothavarayar kovil 1st road (J/196) | 4.78 | 75 Days | C8 or above (High way) | 19/07/2026 | 48,000.00 | 16/08/2026 |
| 11 | NP/14/41(15)/02/05/CF / 2026/25 | **Package 10**<br>1. Construction of Sapapathi road 6th lane (J/190)<br>2. Renovation of Paddiolai balance work & winding work (J/182)<br>3. Renovation of Niyampathai veethy ( Inuvil raillway station road) (J/190)<br>4. Construction of Murugamoorththi Kovil back lane (J184)<br>5. Construction of Nanthavil Iyappan Kovil 1st lane (J/193) | 7.62 | 75 Days | C8 or above (High way) | 16/08/2026 | 76,500.00 | 13/09/2026 |
| **PSDG - Dithwa 1250Mn Fund** | | | | | | | | |
| 12 | NP/14/41(15)/02/05/PSDG -Dith/ | Renovation of Mayana Veethy (J/200) | 2.91 | 60 Days | C9 or above (High way) | 19/07/2026 | 29,500.00 | 16/08/2026 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya sabha, Chunnakam.**

**15.05.2026**



மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய 2026ஆம் ஆண்டுக்கான மாணவ தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (ச-9)





முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தை முன்னிட்டு கிராமிய உழைப்பாளர் சங்கமும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து பொதுமக்களுக்கான முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாட்டை நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரும்பிராய் செல்வபுரம் கிராமத்தில் முன்னெடுத்தன. *(41-66)*

# மன்னார் மறைமாவட்டத்தில் விவிலிய வினாவிடைப் போட்டி

மன்னார், மே 15

தேசிய ரீதியில் நடைபெறவுள்ள கத்தோலிக்க மாணவர்களுக்கான, விவிலிய வினாவிடை போட்டிக்கு, மன்னார் மறைமாவட்டத்திலிருந்து மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான மறைக்கோட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகும். தலைமன்னார் கட்டுக்காரன்குடியிருப்பு கீழியன்குடியிருப்பு பேசாலை சிறுத்தோப்பு ஜோசப்வாஸ் நகர் மற்றும் தோட்டவெளி பங்கு மாணவர்களுக்கு பேசாலை மன்.புனித பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தி லும், தாழ்வுபாடு எழுத்தூர் சாந்திபுரம் பள்ளிமுனை பேராலயம் ஆகியவற்றின் பங்கு மாணவர்களுக்கு மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை யிலும், வங்காலை வஞ்சியன்குளம் கட்டைக்காடு நானாட்டான் அரிப்பு அளவக்கை பங்கு மாணவர்களுக்கு நானாட்டான் மன்.டிலாசால் கல்லூரியிலும், உயிலங்குளம் பொந்திக்கண்டல் முருங்கன் கற்கிடந்தகுளம் சிருக்கண்டல் சிலாவத்துறை முள்ளிக்குளம் பங்கு மாணவர்களுக்கு மன்.முருங்கன் மத்திய கல்லூரியிலும், தேவன்பிட்டி அந்தோனியார்புரம் விடத்தல்தீவு பங்கு மாணவர்களுக்கு மன். இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயத்தி லும், மாந்தை அடம்பன் ஆட்காட்டிவெளி காத்தான்குளம் பறப்பாங்கண்டல் ஆகியவற்றின் பங்கு மாணவர்களுக்கு ஆண்டாங்குளம் றோ.க. த.க.பாடசாலையி லும், மடு மறைக் கோட்ட பங்கு மாணவர்களுக்கு மன். கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலையிலும், வவுனியா மறைக்கோட்ட பங்கு மாணவர்களுக்கு இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையிலும் பரீட்சைகள் நடைபெறும். (சு-60-பி)

# சடலத்தை உரிமை கோருக

யாழ்ப்பாணம், மே 15

யாழ்.போதனா மருத்துவமனையில் விடுதி இலக்கம் 8 இல் அனுமதிக்கப்பட்டு, கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி உயிரிழந்த சிதுல் சசாரா (வயது28) என்பவரது சடலம் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது. எனவே குறித்த சடலத்தை அடையாளம் கண்டு உரிமை கோருமாறு மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

# உல்லாசப் படகுச்சேவையை நடத்த தலைமன்னார் மக்கள் நிபந்தனை!

மன்னார், மே 15

தலைமன்னார் பகுதியில் உல்லாசப் பயணிகளுக்கான படகுச் சேவையை நடத்துவதற்கு, அந்தப் பகுதி மக்கள், மன்னார் பிரதேச சபையின் ஊடாக நான்கு நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் பகுதியில் உல்லாசப் பயணிகளுக்கு படகுச் சேவையை நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தும், மன்னார் பிரதேச சபையின் அனுமதி கிடைப்பதில் காலம் தாழ்த்தப்படுவதால், இந்தச் சேவையைத் தொடர முடியாதுள்ளது என்று கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. காலதாமதத்தால் உல்லாசத்துறை மூலம் கிடைக்கும் வருமானம் இழக்கப் [illegible] தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த மன்னார் பிரதேசசபைத் தவிசாளர், அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் குடிமக்களின் உறுதிக் காணிகளும் காணப்படுகின்றன. கடற்கரைப் பூங்காவாக கடந்த 4 வருடங்களாக பிரதேசசபையால் பராமரிக்கப்பட்டு வரும் பகுதியில் ஒரு பகுதியை விடுவிக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். அதேவேளை படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டால் உள்ளூர் படகு உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், மீனவர்கள் பாரம்பரியத் தொழிலைச் செய்யும் போது பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் சேவையை நடத்தவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவற்றுக்கு அனுமதி வழங்கினால் படகுச் சேவையை நடத்த முடியும்-என்றார். (சு-60-பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொழிற்சந்தை

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும், சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் பிரதேச தொழிற்சந்தை–2026 நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது தனியார்துறை வேலைவாய்ப்பு, உயர்கல்விக்கான வழிகாட்டல், தொழில்சார் கற்கைநெறிக்கான வழிகாட்டல் மற்றும் சுயதொழில் முயற்சி ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளன. (ஏ–41–66)




## செம்பியன்பற்று வடக்கு
## புனித பிலிப்பு நேரியார் ஆலய
### வருடாந்த திருவிழா - 2026

- 17.05.2026: கொடியேற்றம் மாலை 5 மணியளவில் ஆரம்பமாகும்.
- 25.05.2026: நற்கருணை விழா மாலை 5 மணியளவில் ஆரம்பமாகும்.
- 26.05.2026: திருவிழா திருப்பலியானது காலை 6.30 மணியளவில் அருட்பணி ஜெயந்தன் பச்சேக் அமலரித்தியாகிகள் வட மாகாண முதல்வர் அடிகளாரின் தலைமையில் ஒப்புப்படும்.
- திருவிழாவிற்கான பயண ஒழுங்குகள் யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை பேருந்துகள் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- திருவிழா வியாபாரப் பதிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும். வர்த்தகப் பிரிவுக்கான தொடர்பு இலக்கம்: 0771748741
- திருவிழா அன்று மாலை யுவானியர் நாட்டுக்கூத்து ஆலய முன்றலில் இடம்பெறும்.
- புனிதரின் ஆசீர்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இப்படிக்கு - ஆலய பங்குத்தந்தை**
**மற்றும் ஆலய பங்கு மக்கள்** (cs.10107) (N-1)

# நினைவுதின அழைப்பிதழ்

**முதலாம் ஆண்டு** **இரண்டாம் ஆண்டு**





**கடந்த 14.05.2025 மற்றும் 01.05.2024 அன்று இறைபதமடைந்த**

| அமரர் குருசுமுத்து பாக்கியநாதன் | | அமரர் றொசாறியோ ராணி பாக்கியநாதன் | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 16.05.1942 | 14.05.2025 | 10.04.1947 | 01.05.2024 |

அவர்களின் ஆண்டு நினைவையொட்டி நாளை 16. 05. 2026 சனிக்கிழமை அன்று காலை 11 மணிக்கு **சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்** ஒப்புக்கொடுக்கப்படும் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆரோக்கியா வாசம்,**
**டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்,**
**யாழ்ப்பாணம்.**

**இங்ஙனம்**
**அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி) (மெக்சிகோ)** - 525515026210 **(மகன்)**
**கிறிஸ்ரி அருள்றாஜன்** - 077 3733 480 **(மகன்)**
**கிறிஸ்ரி கருணறாஜன்** -076 2380837 **(மகன்)**
**அல்பேட் பிரீஸ் (பிரான்ஸ்)** - 0033651850594 **(மருமகன்)**
**ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா)** -0016474031441 **(மருமகன்)**

(CS 61428) (N-1)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 09 . 2000 | 14 . 05 . 2026 |

## சிறிதரன் குஜேந்தன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பூநாறி வீதியை (செல்வா பலஸ்) வசிப்பிடமாகவும் கொண்ட சிறிதரன் குஜேந்தன் 14.05.2026 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிறிதரன் - சர்மிளா தம்பதிகளின் அன்பு மகனும், ஸிவேத்தா, கஜிந்தன், தருணிகா, யானுகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் இராசமணி தம்பதிகளினதும், நாகேந்திரம் - கமலநாயகி தம்பதிகளின் அன்புப் பேரனும், யசிதர், றேனுகா ஆகியோரின் பெறாமகனும். இந்திரதேவன், சுபாசினி ஆகியோரின் அன்பு மருமகனும், ராஜ்குமார், சசிரேகா, அமுதா, குமுதா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற தேவதரன் மற்றும் துவாதரன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பூநாறி வீதி,**
**கொக்குவில்.**
076 244 3020, 077 465 4982

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(61432) N-1

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### உப அலுவலகம், சுன்னாகம்.
### வட்டாரம் - 5 மயான வீதி, ஆதன இல - 29

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட மயான வீதி, சுன்னாகம், எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் -05 மயான வீதி, ஆதன இல. 29ல் வின்சிலா கைம்பெண் செல்லம் உரிமை கோருபவர் k.ஈஸ்வரலிங்கம் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு நன்னியன் தம்பிமுத்தன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை:வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசெயலர் பிரிவு, J/200 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"பொல்வத்தை அல்லது கொல்வத்தையும் மறுபிரிவுகளும்"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 05 உடைய ஆதனமானது கந்தையா ஈஸ்வரலிங்கம் பெண் சந்தியலட்சுமி என்பவரால் 5247 ஆம் இலக்க 15.11.2005 திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக.**

| | |
|---|---|
| கிழக்கு - | சுப்பிரமணியம் கந்தசாமிக்கும் சுப்பிரமணியம் செல்வராசாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் |
| வடக்கு - | வீதி |
| மேற்கு - | கந்தையா ஈஸ்வரலிங்கம் பெண் சந்தியலட்சுமியின் ஆதனம் |
| தெற்கு - | பொன்னம்பலம் பெண் அன்னம்மாவுக்கும் கந்தையா பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனம் |

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களின் 2005.05.18 திகதிய 1536A ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு 01 நிலப்பரப்பு 03 குளி 10.20ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தரிசு ஜொணி சுவீன்ரென் அனிற்றஸ் மதுரநாயகம் அவர்கள் மூலம் 03.09.2025 ஆம் திகதிய 9163 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் 41/1B, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தை சேர்ந்த றோமுவோல்ற் ஜோன்சன் அருள்ராஜா பெண் சாந்தபிரபா (702573548V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 31 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது **றோமுவோல்ற் ஜோன்சன் அருள்ராஜா பெண் சாந்தபிரபா** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறியத்தருகின்றேன்.

**தி.பிரகாஷ்**
**தவிசாளர்,**
**வலி. தெற்கு பிரததேசசபை, சுன்னாகம்.** **15.05.2026**

(ct.47525)(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்கத்தின் எடுபிடியாக செயற்படுகின்றார் ஆளுநர்!

## யாழ். மாநகரசபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீர்மானங்களுக்கு முரணாக அரசாங்கத்தின் எடுப்பிடிபோன்று ஆளுநர் வேதநாயகன் செயற்படுகின்றார் என்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் நேற்றுக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு முதல்வர் மதிவதனி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே உறுப்பினர் மதுசிகன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஏற்பாடு செய்த இசை நிகழ்ச்சி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருந்துவபீடம் ஏற்பாடு செய்த இசை நிகழ்ச்சி ஆகியவற்றுக்கு மாநகரசபையால் அறவிடப்படும் வரியைக் குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. சபையில் இடம்பெற்ற விவாதங்களைத் தொடர்ந்து வரியைக் குறைப்பதற்கு சபையும் உடன்பட்டது. ஆனால், சபையின் வருமானத்தை குறைப்பதை அனுமதிக்க முடியாது என்று ஆளுநர் அந்த வரிக்குறைப்புக்கு மறுத்துவிட்டார்.

ஆனால், யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இராணுவத்தால் ஏற்பாடுசெய்த புதுவருட நிகழ்வுக்கு மைதான குத்தகையை மாநகரசபைக்கு வழங்காது ஆளுநர் தன்னிச்சையாக அனுமதியை வழங்கியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாநகரசபையின் தீர்மாணங்களை மீறி, அரசாங்கத்தின் எடுபிடியாக வடமாகாண ஆளுநர் செயற்படுகின்றார். அவர் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இல்லாமல் செய்ததை ஏற்க முடியாது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் ஏற்பாடு செய்த நிகழ்வுகளுக்கு வரிச்சலுகை வழங்க முடியாது என மாநகர சபை தீர்மானத்தை மீறி உத்தரவு போடும் ஆளுநர், எவ்வாறு இராணுவ நிகழ்வுக்கு எவ்விதவிதமான பணமும் அறவிடாது அனுமதி வழங்க முடியும்? உயரிய சபையில் முதல்வர் முன்னிலையில் எடுக்கப்படும் தீர்மானத்தை ஆளுநர் தன்னிச்சையாக மீறுவார் ஆயின் மக்கள் சபை எதற்கு? - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட முதல்வர் மதிவதனி, 'சில விடயங்கள் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டாலும் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட வேண்டும் என்பது சட்டம். ஆளுநர் எதைச் சொல்லுகிறாரோ அதை நடைமுறைப்படுத்தினோம்' - என்றார்.

(ம-26)



## கள்ளப்பாட்டில் நினைவேந்தல்

முல்லைத்தீவு, மே 15

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் நினைவேந்தல் வாரம், கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில், உணர்வெழுச்சியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்பகத்தில் கறுப்பு, வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. நிகழ்வில் பங்கேற்றோருக்கு முள்ளி வாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. நிகழ்வில் பெருந்திரளான மக்கள் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றிருந்தனர். (க-246)


## மரண அறிவித்தல்



### தேவகுமார் பத்மினி

பிறப்பு 13.02.1969 — இறப்பு 14.05.2026

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட தேவகுமார் பத்மினி அவர்கள் நேற்று (14.05.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவபாலசிங்கம் பேரின்பநாயகி அவர்களின் மகளும், விசுவலிங்கம் தையல்நாயகி அவர்களின் மருமகளும், தேவகுமார் அவர்களின் மனைவியாரும், டக்ஷிகா, மிதுஷன், டனுசிகா, ஜதுசன், ஜிதுசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மதுஷனின் அன்பு மாமியாரும், சர்வின், மஹிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், மதிபாலசிங்கம், ஜெயவீரசிங்கம், ஹேமலலிதா, கார்த்திகேயன், விஜிதா ஆகியோரின் அன்பு சகோதரியும், மலைக்குமாரி சிவறமணி, மனோரதன், குமரேஸ்வரி, ரகுகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2026) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புனாவோடை இந்து மயானத்திற்கு (அராலி தெற்கு) எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
(மகள்) 077 1010 558
(மருமகன்) 077 170 7272



## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 09 . 1967



இறப்பு 12 . 05 . 2026

### திரு. சண்முகநாதன் சக்திகுமாரன்

(பிரதி முகாமையாளர் - விநியோகப் பிரிவு (Supplier Department) - மக்கள் வங்கி,
பழைய மாணவன் - யாழ்.இந்துக்கல்லூரி A/L 86')

யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சக்திகுமாரன் **12.05.2026** அன்று (செவ்வாய்க் கிழமை) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தர்மகுலதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜீவராணி அவர்களின் அன்புக் கணவரும், ஜஸ்மின் சரண்யா (ஆசிரியர்), ராகவி (வங்கி ஊழியர்), காருணியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீவ்காந்த் (அயர்லாந்து) அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சிவகுமார் (வங்கி முகாமையாளர் - மக்கள் வங்கி), சந்திரிக்கா, பவானந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகநாதன் (பரீட்சைத் திணைக்களம்), காலஞ்சென்ற யோகநாதன் (சுங்கத் திணைக்களம்), சுரேஷ் (London), டெய்சிராணி, யமுனாராணி (நீர் வழங்கல் சபை) ரமேஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருட்பிரகாசம் (பொறியியலாளர்), சிவநேசசிங்கம் (யுனிசெவ்) ஆகியோரின் சகலனும், றேகா (London), கஸ்தூரி (ஆசிரியர்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், பிரசானந் (London).யுவகாந்த் (France), சிந்துஜா (பொறியியலாளர்), காலஞ்சென்ற ரூபின்யா, லஹாரிண்யன் (வைத்தியர்), கிறிஸ்டின் (London), ஹரிஷா (London), ஷெரின் (London), ஏஞ்சலினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபேந்தன் (தனியார் ஊழியர்), நிவோதிதன் (நெதர்லாந்து), சங்கமித்தா (டுபாய்) ஆகியோரின் சிறிய தந்தையும், டில்ஷான் (வங்கி ஊழியர்), சமிந்தன், அபிஷன், அருஷன் (Germany), றோஷன், ஏஞ்சலின்தானியா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல 48 B, ஹாமஸ் அவனியு வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

17.05.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பிற்பகல் 2 .00 மணிக்கு அடக்க ஆராதனை நடைபெற்று கல்கிசை சேமக்காலையில் (நிசலசெவன) நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(cr.47540) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முதலமைச்சரின் கண்காணிப்பில் போதைத் தடுப்புப்படை

சென்னை, மே 15

தமிழக முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் போதைப்பொருள் தடுப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 65 இடங்களில் போதைப் பொருள் தடுப்புப் படை செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் மட்டுமே 12 இடங்களில் போதைப்பொருள் தடுப்புப் படை செயற்படும் என்றும், குற்றவாளிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1952



இறப்பு 14 . 05 . 2026

### ஐயாத்துரை பரமேஸ்வரி

யாழ்ப்பாணம் அச்சகவீதியை வசிப்பிடமாக கொண்ட ஐயாத்துரை பரமேஸ்வரி அவர்கள் நேற்று (14.05.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை, லில்லி தம்பதியினரின் அன்பு மகளும், புவனேஸ்வரி, மற்றும் காலஞ்சென்றவர்களான சந்திரவதனா, ராஜேஸ்வரி (முன்னாள் யாழ் மறைக்கல்வி நடுநிலைய அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.05.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப 3.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற் காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

தகவல்:
புவனேஸ்வரி (தங்கை)
ச. மரியதாஸ் மனோகரன் (0777741750)

(CS 31805) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1939



மறைவு 14 . 05 . 2026

### திருமதி பாலசுப்பிரமணியம் ஐயா உருக்குமணி அம்மா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் ஐயா உருக்குமணி அம்மா அவர்கள் நேற்று (14.05.2026) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும் பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் மனைவியும் சண்முகம், மங்களேஸ்வரி, சதாசிவக்குருக்கள், காலஞ்சென்ற லலிதாம்பாள் அவர்களின் தாயாரும் அமிர்தகௌரி, சதாசிவம், காலஞ்சென்ற யோகேஸ்வரி, குமரகுரு அவர்களின் மாமியாரும் கீர்த்தனா, ஸ்ரீகரன், கீரன், யுவாகினி, சங்கீதா, கீதாஞ்சலி, துளசிராம் ஆகியோரின் பேத்தியும் நேத்ரன், ஸம்வத்சன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (15.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(CR 47542)A

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 09 . 1959



மறைவு 14 . 05 . 2026

### திரு. மாரிமுத்து சித்திவிநாயகம் (சித்தி)
### (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - சாவகச்சேரி)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மாரிமுத்து சித்திரவிநாயகம் அவர்கள் நேற்று (14.05.2026) வியாழக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து மீனாட்சி தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான பரமகுரு இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பத்மினியின் அன்புக் கணவரும், கஸ்தூரி, பிரசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ், ஜனோயன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிஸ், பிரதிசா, அகிஷா, ஜனுசா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கயிலாயபிள்ளை, காமாட்சி, சிவசம்பு ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 17.05.2026 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியள்வில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்.
077 020 1448
077 634 1428

(CR 47541)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 03 . 1935



மறைவு 13 . 05 . 2026

### திருமதி தவமணி சிவபாலன்

யாழ்ப்பாணம் கட்டுடையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி சிவபாலன் அவர்கள் கடந்த 13.05.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவபாலன்(முன்னாள் கொத்தணி அதிபர் - உரும்பிராய் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவமணி, பூமணி மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.சிவராஜினி(அவுஸ்திரேலியா), சிவசொருபி(கனடா), Dr.சிவன்சுதன், சிவதவாணி(போதனாசிரியர் - திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜநாயகம்(பட்டயக்கணக்காளர்), Dr.சத்தியபாலன்(கனடா), காயத்திரி(கணக்காளர்), Dr.சுரேஷ்குமார் (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதங்கி - சாமுவேல், Dr.சுபாங்கி - ஹரோல்ட், Dr.தீப்பிகா - கோசாந்தன், Dr.அபிஷிக்கா - கிரிஹரன், சிவேந்தன், சிந்தூரி, நிதுஜன், பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் புளோராபெல், எலா, அஜய், டேய்சி, தியாரா, தருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

“சிவாலயம்” சிவன்பாலன் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல் : Dr.சிவன்சுதன்
(பொது வைத்திய நிபுணர் -
யாழ். போதனா வைத்தியசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சட்டசபையில் விஜய் உரை

தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி.ஜோசப் விஜய், நேற்று சட்டப் பேரவையில் தனது முதலாவது உரையை ஆற்றினார்.

சபாநாயகராகத் தெரிவாகியுள்ள ஜே.சி.டி. பிரபாகரை வாழ்த்தி உரையாற்றிய முதலமைச்சர், மக்களின் எதிர்பார்ப்புகளை பேரவைக்குக் கொண்டு வந்து அதனைச் செயற்படுத்துவதற்காக திட்டங்களை சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இந்தப் பேரவைக்கு உள்ளது. அதிகமான மக்கள் அதிக நன்மைகளைப் பெற்றுள்ளார்கள் என்ற வகையில் நமது செயற்பாடுகள் அமையவேண்டும். இங்கே அனைவரும் சமம்.

ஓர் உறுப்பினரைக் கொண்ட கட்சிகள் இடம் பெற்றிருப்பவர்களின் கருத்துகளுக்கும், த.வெ.க. உறுப்பினர்களின் கருத்துகளுக்கும் சமமாக மதிப்பளிக்கப்பட்டு, நன்மைகள் ஏற்கப்பட்டு ஜனநாயகத்தின் இதயமாகவும், மூளையாகவும் இந்தப் பேரவை செயற்படும். அதற்குறிய வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த பேரவையை வழிநடத்தும் பண்பைப் பெற்ற தலைவரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிப்பார்கள். பேரவையின் மாண்பையும் கண்ணியத்தையும் உறுப்பினர்களின் கண்ணியத்தையும் காக்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (எ-இ)

### ஈழத்தமிழரின்...

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ள விஜய்க்கு பிரிட்டன் பாராளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்து கட்சிக் குழு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது. முதல்வர் விஜய் தமிழக மக்களை மட்டுமல்லாமல் ஈழத்தில் உள்ள தமிழர்களின் நலன்களையும் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களின் நலன்களிலும், அவர்களின் தீர்வு விடயத்திலும் தமிழக அரசாங்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு பிரிட்டன் பாராளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்து கட்சிக் குழு தயாராகவே உள்ளது. ஈழத்தமிழர்களின் ஜனநாயக விழுமியங்கள் முதல்வர் விஜயின் ஆட்சியில் கட்டியெழுப்பப்படும் என்று நாங்கள் தீர்க்கமாக நம்புகின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

### மலசலகூடத்...

சட்ட ஆலோசனையைப் பெறும் முன்மொழிவை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா முன்வைத்தார்.

இதன்போது, மக்களின் நலன்சார் விடயமாக இது காணப்படுவதால் இரு தரப்பையும் சமரசத்துக்கு இணங்கச் செய்து தீர்வைக் காணவேண்டும் என்று தற்போதைய யாழ். மாநகர சபை உறுப்பினரும், முன்னாள் முதல்வருமான திருமதி யோகேஸ்வரி வலியுறுத்தினார். சட்ட ரீதியான நடவடிக்கை குறித்த திட்டத்தின் நோக்கத்தைப் பாதித்துக் காலத்தை வீணடிக்கச் செய்யும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், குறித்த விடயம் சட்ட ஆலோசனை அல்லாது நேரடியாகவே சட்ட நடவடிக்கைக்குச் செல்ல வேண்டுமென யாழ்.மாநகரசபை உறுப்பினர் மதுசிகன் வலியுறுத்தினார். எனினும், சட்ட ஆலோசனை பெற்று அடுத்த நடவடிக்கைக்குச் செல்ல யாழ்.மாநகரசபையில் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### தவறுசெய்த...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துறவிகள் மத்தியில் அண்மைக்காலமாக துயரச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இது ஒட்டுமொத்த துறவிகளையும் அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஓரிருவர் செய்யும் தவறுகளுக்காக அனைத்துத் தேரர்களையும் தவறாகப் பார்க்கும் நிலைமை மாற்றப்பட வேண்டும். இதற்கு தவறு செய்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் துறவற உடை களையப்படுதல் அவசியம். இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து மகாநாயக்க தேரர்கள் அரசாங்கத்திடம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர். இப்போது அவற்றைச் செயற்படுத்துவது அவர்களின் கையில் உள்ளது - என்றார். (அ-ம)

### தமிழினப்...

கின்றது. இந்த நிலையில் முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜாவின் கோரிக்கைக்கு அமையவே நேற்று இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### கிளிநொச்சி...

அஞ்சலி நிகழ்வின் ஒரு பகுதியாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-113)

### வவுனியாவை...

மாவட்டங்களுக்கும் பயணித்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே அது வவுனியாவை நேற்றுச் சென்றடைந்தது. பெருமளவான மக்கள் ஒன்றுதிரண்டு உணர்வுபூர்வமான முறையில் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள். (அ-ம-110)

### அமைச்சரவை...

தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியமொன்றை அமைப்பதற்கு எதிராக உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தார். அந்த முன்மொழிவே சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 11 மாடிகளைக் கொண்ட யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதைப் பேணிச் செல்வதற்காகக் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, குறித்த பண்பாட்டு மையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கு ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர், பண்பாட்டு மையம் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக யாழ். மாநகரசபைக்குப் பாரப்படுத்தல் வேண்டும். இதற்கு முரணாகவே நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### மின்னல்...

வாறு உயிரிழந்தவராவார். வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது அவர்மீது மின்னல் வீழ்ந்துள்ளது. இதையடுத்து அந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-20-26)

### வடக்கில்...

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தற்போது மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இதன் தாக்கம் இன்றும் தொடர்வதற்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணம் கனமழையைப் பெறுவதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்துடன், நாளையும் மழையுடனான காலநிலை நீடிக்கும் - என்றுள்ளது. (அ-ம-66)

## இன்றைய ராசி

**மேடம்:** அதிர்ஷ்டகரமானநாள். புதியமுயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம்ஏற்படக்கூடும். தந்தைவழிஉறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகளால்தேவையற்றசெலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில்கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்ச்செலவுகளால்கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின். கைலாசவாகனத் திருவிழா கடந்த திங்கட்கிழமை இரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. (சு-66)





வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்துச் சப்பறத்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பக்திபூர்வமாக இடம்பெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச் சப்பறத்தில் பரராஜசேகரப் பிள்ளையார் வீதி உலா வந்தார். (சு-66)



இருபாலை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 27ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 நாள்கள் நடைபெறவுள்ளது. அதைமுன்னிட்டு மஹோற்சவ பத்திரிகை கையளிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா செல்வசேனக் குருக்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனிடமும் இந்து மன்ற காப்பாளர் கு. பாலஷண்முகனிடமும் மஹோற்சவப் பத்திரிகையை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார். (ச)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில் மத்தி வேலாயுதம் வீதி. (A9 வீதிக்கு அருகாமையில்) 4 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு.

077 154 5512

# பஞ்சாப்பை வீழ்த்தி மும்பை ஆறுதல்!

## பஞ்சாப்பின் பிளேஓவ் கனவு சிக்கலில்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பைத் தோற்கடித்தது மும்பை. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து பஞ்சாப்பின் பிளேஓவ் கனவு அந்தரத்தில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரப்சிம்ரன் சிங் 57 ஓட்டங்களையும், ஓமர்சாய் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்துல் தாக்கூர் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணி ஆரம்பத்திலிருந்து தடுமாற்றத்தை வெளிப்படுத்தியது. 26 பந்துகளில் ரோகித் சர்மா 25 ஓட்டங்களையே பெற்றார். ரதர்போர்டும் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 21 பந்துகளில் 20 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். இந்தப் பின்னடைவைச் சரிசெய்யக்கூடிய வகையில் அடித்தாடினார் திலக் வர்மா. இறுதி 3 ஓவர்களில் 51 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலை. திலக் வர்மாவும், வில் ஜக்ஸும் இணைந்து சிக்சர், பவுண்டரிகளாக பறக்கவிட்டனர். முடிவில் ஒரு பந்து மீதமிருக்க வென்றது மும்பை. (ம)




# 74வது அகவை தின வாழ்த்துக்கள்



## சிவ இ. குழந்தைவடிவேலு JP

ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்

தலைவர் :
ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம். கைதடி
தலைவர் :
ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையம். கைதடி
தலைவர் :
அருள் மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம். கைதடி
உப தலைவர் :
சைவ ஐக்கிய சங்கம். கைதடி
சபை உறுப்பினர் :
கைதடி கிழக்கு இந்து வாலிபர்சங்கம். கைதடி
ஓய்வு நிலை உறுப்பினர் :
இந்துசமய பேரவை. சங்கானை
ஓய்வு நிலை :
விசாகாரெட் வர்த்தகநிலையம் கைதடி

0714363253
0757074270

நிர்வாகசபை உறுப்பினர் : அருள் மிகு
இலுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயில். கைதடி
நிர்வாகசபை உறுப்பினர் :
அருள் மிகு வீரகத்தி பிள்ளையார் கோயில். கைதடி
சபை உறுப்பினர் :
அருள் மிகு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயில். கைதடி
ஓய்வு நிலை சபை உறுப்பினர் : அருள் மிகு
வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம். கைதடி
ஓய்வு நிலை சபை உறுப்பினர் : அருள் மிகு
நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில். நுணாவில்
காப்பாளர்:
அருள் மிகு முதலி அம்மன் கோயில். கைதடி
சபை உறுப்பினர் :
கைதடி கிழக்கு சனசமூக நிலையம் கைதடி




## விசாகாறேட்

உரிமையாளரும், ஊழியர்களும்.
கைதடிச்சந்தி, கைதடி.
0776956372




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.